# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – VII

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 09.12.2015 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- உதவிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (யாழ்ப்பாணம், வடமராட்சி,தீவகம்,முல்லைத்தீவு, வவுனியா தெற்கு, மடு)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, மன்னார், மடு)
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்)
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு.
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.
- இணைப்பாளர், மாகாண உளவள நிலையம்.
- ஆசிரிய வளவாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.
- நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் கூட்டத்திற்கு வருகைதந்த மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய ஏழாவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

☞ சென்ற கூட்ட அறிக்கை அனைவருக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அக் கூட்ட அறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருந்தால் அறிவிக்கலாம்.

☞ அடுத்து வேலைகள் தொடர்பான முன்னேற்றங்களை பார்ப்போம்.

☞ CBG நிதி தொடர்பில் ஆராயப்பட்டது.

☞ அடுத்து PSDG 278 Mn இல் 163 Mn செலவு செய்யப்பட்டுள்ளது.

☞ அடுத்து TSEP தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

☞ லிங்கம் ஒப்பந்தகாரர்களுக்கு 2016 ஆம் ஆண்டு எதுவித ஒப்பந்தங்களும் வழங்கப்படக் கூடாது என தெரிவிக்கப்பட்டது. இனி வருங் காலங்களில் கல்வி சம்பந்தமான வேலைகளில் கறுப்புப் பட்டியலில் (Black List) இந்த ஒப்பந்தகாரரின் பெயர் போடப்படும்.

☞ அடுத்து நிகழ்ச்சி நிரலின் படி PSDG 2016 இற்குரிய திட்டத்தினை அனைவரும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய அனைவரும் சமர்ப்பித்தல் வேண்டும். கஸ்ட பிரதேச பாடசாலைகளில் ஆசிரிய விடுதி அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☞ ஆசிரிய பயிற்சிக்கு ஒதுக்கப்பட்ட 80Mn நிதியிலிருந்து ஆசிரியர்களுக்குரிய உள்ளீடுகள் (Input) கொள்வனவு செய்யப்படும்.

☞ குடிநீர்வசதி, மலசலகூட வசதி இல்லாத பாடசாலைகளிற்கு அதனை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☞ Vocational Training Centre அமைப்பதற்கு 34Mn ஒதுக்கப்பட்டுள்ளது. NVQ சான்றிதழ் பெறக்கூடிய வகையில் குறைந்தது ஒரு மாவட்டத்திற்கு ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இளைஞர் விவகார அமைச்சும் எமது அமைச்சின் கீழ் உள்ளடங்குகின்றது. அதன் கீழ் உள்ளடங்குவோருக்கும் பயிற்சிகளை வழங்க முடியும்.

☞ அடுத்து அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்திற்கமைய எம்மால் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சு, இசுறுபாயாவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர் விபரங்கள் தெரிவிக்கப்பட்டது.

☞ அடுத்து பொது விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இலவச பாடநூல் விநியோகம் தொடர்பிலான பொழிப்பினை (Summary) எமக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

☞ இலவச சீருடை வவுச்சர்கள் வழங்குதல் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எம்மால் வெளியிடப்பட்ட இசுறுபாயாவின் 26/2012 சுற்றறிக்கையை

அடிப்படையாக கொண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் புடவைக் கடைகளையும் உள்ளடக்கும்படி கேட்டுக்கொண்டார். மாணவர்கள் சீருடையை கொள்வனவு செய்யும் இறுதித் திகதி 31.01.2016 அதற்கிடையில் மாணவர்கள் சீருடையை கொள்வனவு செய்வதனை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பாடசாலை ஆரம்பித்து ஜனவரி 04 தொடக்கம் ஜனவரி 11 ஆந் திகதிக்குள் அனைத்துப் பாடசாலைகளும் முழு வவுச்சர்களையும் பெற்று படிவங்களில் பதிந்து வலயங்களிற்கு அனுப்பப்படல் வேண்டும். வலயக் கல்வி அலுவலகங்கள் அதனைத் தொகுத்து கல்வி அமைச்சு இசுறுபாயாவிற்கு அனுப்புவதுடன் எமக்கும் ஒரு பிரதி சமர்ப்பித்தல் வேண்டும். எமது மேற்பார்வைக் குழு ஜனவரி 14 ஆந் திகதி முதல் ஜனவரி 20 ஆந் திகதிக்குள் முழு பாடசாலைகளையும் மேற்பார்வை செய்யும்.

☞ பாடசாலை தவணை அட்டவணை, பாடசாலை செயற்பாடுகள் அடங்கிய நாட்காட்டி தொடர்பாக சுற்றிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிற்குரிய பாடசாலை நாட்கள் 210. பாடசாலைகள் நடப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். 2016 ஆம் ஆண்டு விடுமுறை நாட்கள் அதிகம் என்பதனால் 197 நாட்களை பாடசாலை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. 197 நாட்கள் பாடசாலை நடந்தது என்பதனை அனைத்துப் பாடசாலை அதிபர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அடுத்தது நாட்காட்டி தொடர்பாக கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நாட்காட்டி கிடைத்திருக்கும். அதனை அடிப்படையாகக் கொண்டு மாகாணக் கல்வித் திணைக்களம் நாட்காட்டியினை தயாரித்து வலயக் கல்வி அலுவலகங்களிற்கு அனுப்புதல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு வலயக் கல்வி அலுவலகங்கள் நாட்காட்டியினைத் தயாரித்து அனைத்துப் பாடசாலைகளிற்கும் அனுப்புதல் வேண்டும். அனைத்து வலயங்களினாலும் மாகாணத்தினாலும் தயாரித்த நாட்காட்டிகளின் பிரதி எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

☞ அனைத்துப் போட்டிகளும் (தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி), அனைத்து விழாக்களும், கல்விச் சுற்றுலாக்கள் என்பவை இரண்டாம் தவணைக்கு முன்னர் நடத்தி முடித்தல் வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் பெப்ரவரி 10 ஆந் திகதிக்குள் நடத்தி முடித்தல் வேண்டும். சில போட்டிகளிற்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய நேரசூசிகள் யாவும்31 டிசெம்பர் 2015 இற்கு முன்னர் அனைத்து பாடசாலைகளும் தயாரித்து வலயங்களின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

☞ பாடசாலை தவணை மதிப்பீட்டுப் புள்ளிகள் பாடசாலை தவணை விடுமுறைக்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.

☞ மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெற்று அந்த விபரங்கள் எமக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- ☞ 2016 ஆம் ஆண்டு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை (Annual Implemental Plan) உலக வங்கியின் EKSP தொனிப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (2 Mn இற்குள் வலயக் கல்விப் பணிப்பாளரும் 2-5 Mn இற்குள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் 5 Mn இற்கு மேல் செயலாளரிடமும் அனுமதி பெறப்படல் வேண்டும்.)
- ☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய கல்வி அமுலாக்கற் திட்டங்கள் தொடர்பாகவும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சில இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு 12 Mn தரப்படுகின்றது. (ஒரு பிரதேசத்தில் இரண்டு மாதிரி ஆரம்பப் பாடசாலைகள் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாணவர்களும் 70 புள்ளிகளிற்கு மேல் பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இடைநிலைப் பிரிவு மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களில் கூடிய கவனம் எடுப்பதனை உறுதிபடுத்திக்கொள்ளல் வேண்டும். க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்து மாணவர்களையும் தோற்ற அனுமதிப்பதுடன் தோற்றும் மாணவர்கள் அனைவரும் ஆறு பாடங்களில் சித்திபெறுவதனை உறுதி படுத்திக் கொள்ளல் வேண்டும். க.பொ.த (உ/த) இல் கணித,விஞ்ஞான பிரிவை 40% ஆகவும், தொழிநுட்ப பிரிவை 20% ஆகவும் வர்த்தகப் பிரிவை 20% ஆகவும்,கலைப் பிரிவை 20% ஆகவும் வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.)
- ☞ மாணவர் உளநல செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு 300 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர் மகிழ்வகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- ☞ உடல், உள ரீதியான தண்டனைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ☞ விசேட தேவையையுடைய மாணவர்களைக் கவனித்தல் வேண்டும்
- ☞ மாணவர் வரவை உறுதிப்படுத்துவதற்கு குறைந்தது மாதமொரு முறை பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு இடம்பெறுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- ☞ மாணவர் கல்விச் சபதம் எடுப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- ☞ 2016 ஆம் ஆண்டு தேசிய நல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்குமான அமைச்சு எட்டு கலாசார விழாக்கள் நடாத்த வேண்டுமென பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. தைப்பொங்கல் விழாவினை வலய மட்டத்தில் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- ☞ மாணவர் பாராளுமன்றத்தினை நடைமுறைப்படுத்துவது நல்லது. அதற்கு அதிக காலப்பகுதி எடுக்கின்றது. இதன் மூலம் மாணவர்களின் ஆளுமைத் திறன் விருத்தியடையும்.
- ☞ மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தரம் - 01 முதல் தரம் -13 வரையிலான இலக்குகள் தரப்பட்டுள்ளது. அதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

☞ க.பொ.த (உ/த) 2016 கணித,விஞ்ஞான பிரிவு மாணவர்களிற்கான பரீட்சை ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளது.

☞ எமது இணையத்தளத்தில் க.பொ.த(உ/த) கணித,விஞ்ஞானப் பிரிவிற்குரிய இணையப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

☞ க.பொ.த(உ/த) 2016 இல் தோற்றவிருக்கும் கணித,விஞ்ஞான பிரிவு மாணவர்களிற்கு M-Learning முறை மூலம் Sri Lanka Mobitel உடன் இணைந்து இரவு 06 – 08 மணி வரை பிரபல ஆசிரியர்கள் மூலம் விரிவுரை நடத்தப்படும். மாணவர்கள் பெயர் விபரங்களை அனுப்பினால் அவர்களிற்கு ஒரு கடவுச் சொல் தரப்படும். அதன் மூலம் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை தொடர முடியும். ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் chat பண்ணி தீர்த்துக்கொள்ளலாம்.

☞ அடுத்து நிதி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

☞ பதவியுயர்வு, ஆசிரிய உள்ளீர்ப்பு தொடர்பில் வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைகளை ஏற்கனவே பெயர் தரப்பட்ட ஆசிரியர்களிற்கே வழங்குதல் வேண்டும்.

☞ கிட்டத்தட்ட 6000 ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சம்பள மாற்றியமைப்பை செய்து சம்பள நிலுவை வழங்குவதற்கு தேவையான நிதி விபரங்களை 15 டிசெம்பர் மாதத்திற்கு முன்பு தந்தால் அதனைப் பெற்றுத் தர முடியும்.

☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய Board of Survey ஜனவரி 31 இற்கு முன்னர் முடிப்பதற்கு குழுவினை அமைத்தல் வேண்டும்.

☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய Board of Survey இல் பாவிக்காத வாகனங்களை ஏலத்தில் போடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☞ EMIS இணையத்தளத்தில் விபரங்கள் தரவேற்றம் செய்யப்படாது உள்ளது. பன்னிரண்டு வலயக் கல்வி அலுவலகங்களும் இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்களையும் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் தருதல் வேண்டும்.

☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் முன்னளிக்கை (Presentation) செய்தார்.

☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(விஞ்ஞானம்) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

☞ தொண்டமனாறு வெளிக்கள நிலையத்துடன் இணைந்து மாதிரிப் பரீட்சைகளை நடத்துதல் வேண்டும். பரீட்சை வினாத்தாள்களை தயாரிப்பவர்களிற்கு கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் தரமான வினாத்தாள்களை தயாரிக்க முடியும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

- ☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(தொழிநுட்பம்) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.
- ☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(ஆரம்பக்கல்வி) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.
- ☞ அடுத்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களிற்கு பாடசாலை மட்டத்தில் பாராட்டு விழாக்களை நடாத்தக் கூடாதெனவும் வலய மட்டத்தில் பாராட்டு விழாக்களை நடத்துவதற்கெனவும் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.
- ☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(விசேடகல்வி, முறைசாராக்கல்வி) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.
- ☞ அடுத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்(உளநலம்) அவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | HOP (Higher Order Progress) பயிற்சி வழங்குதல் தொடர்பாக | HOP (Higher Order Progress) இற்கு 28 Mn ஒதுக்கப்பட்டு அதில் 10 Mn மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு நிதியும் வைப்பிலிட அனுமதிக்கப்பட மாட்டாது. அதனை பாடசாலைகளிற்கு நன்கொடை (Grant) ஆக மாற்றும்படி செயலாளர் குறிப்பிட்டார். | • மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி)<br>• சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (அபிவிருத்தி)<br>• சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 02. | செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) தொடர்பாக | அடுத்த வருடம் ஒவ்வொரு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) தர வேண்டும். இதனை பன்னிரண்டு வலயங்கள் ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் தொகுத்து புத்தக வடிவில் தருதல் வேண்டும். இதற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பொறுப்பாக இருப்பார். அடுத்த வருடம் உள்ளக மேற்பார்வைக்கென RIMP இன் ஊடாக பன்னிரண்டு பேர் கொண்ட ஓய்வுபெற்ற | • மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி)<br>• சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்<br>• சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்<br>• சகல சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | கல்விப் பணிப்பாளர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளோம். அவர்கள் மேற்பார்வை செய்து செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். | |

**இத்துடன் கூட்டம் பிற்பகல் 1.45 மணிக்கு நிறைவு பெற்றது.**

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**